

# 10 வது மகாஜனமாலை

## 10.10.2015

அ.ந.கந்தசாமி அரங்கு

**Tolworth Girls School**
**Fullers Way North**
**Surbiton, Surrey KT6 7LQ**

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஐ இ.
Mahajana College Old Students Association – UK
http://www.mahajana.co.uk Email: MahajanaOSAuk@gmail.com



THARANI
JEWELLERY
THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி
வீதத்தில் அடைவு பிடிக்கும்
தலை சிறந்த நிறுவனம்
Our Rates of Interest
2.95%
Loan Term: Up to 6 Months
Documents Required: • Photo ID - Passport or • UK Driving License • Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months.
Terms and Conditions The maximum loan term is for 6 months. If the loan cannot be repaid during this period, a renewal can be made, after interest on the loan is paid in full. If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time, we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstanding. The pledge remains your property until it is sold, but the loan remains outstanding and interest will continue to be charged till the loan is redeemed, or pledge is sold, if you have borrowed over £100, we will write to give you 14 days notice of our intent to sell your pledged Gold.
Interest on Gold loans is charged on daily basis. For example the interest on a £1000 loan after 15 days will be £16.25. For closing the loan after 15 days, you have to pay £1016.25. Non-redemption of these Gold will not affect your credit rating. Please keep the pledge receipt safely. You need to return the original pledge receipt to us for redeeming your Gold.
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111
020 8902 6777
ashni23@aol.com

மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - ஐஇ

**Mahajana College Old Students Association- UK**

# 10வது மகாஜன மாலை

10. 10. 2015 சனிக்கிழமை

அ ந கந்தசாமி அரங்கு

Tolworth Girls School


Fullers Way North

Surbiton

மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - ஐஇ

# Mahajana College Old Students Association- UK

## Executive Committee 2014 - 2015



THE EXECUTIVE COMMITTEE - 2014- 2015 - MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - UK

**Front Row:** Mr G Natkunan (Patron), Mrs T Suriyanarayanan, Mrs G. Kumar, Mrs P Sivanesan, Mrs V Navaratnam, Dr Theva Nathan ( President), Mr A Wimalathasan (Secretary), Mr R T Sambanthan (Treasurer) Cllr. W Thayalan ( Patron),

**Standing:** Mr V Sivanantharajah, Mr V R Ramanathan, Mr N Srisabesan, Mr V Thavamuruganathan, Mr M Yasotharan, Mr S Balakumar, Mr N Murali, Mr N Kirupakaran, Mr S Ahilan, Mr N Srigengatharan, Mr V Sivarathan

**Absent:** Mr S Kanesalingam, Mr B Buvanendra, Mr V Shanmugarajah, Mr G Balakulendran, Mr K Seyon, Mr K S Sarveswaran, Mr S Kugarajah, Mr W Jeyabalan Mr N Raveendran, Mr P Tharmakulasingam, Mr P Vigneswaran

# Message from the President

It gives me great pleasure to welcome you all to the 10th Mahajana Malai.We have celebrated this event in various ways in the past.This year we wish to welcome local Mahajanans to exhibit their talents ,diversity of skills and creative pursuits.As most of you know,Mahajana College is renowned not only for its academic excellence but also for co- curricular and extra curricular achievements.Mahajanans in UK are not an exception.This evening,we have dances,dramas and music all performed by Mahajanans.

We are pleased to have **Dr.Indrani Muruges** as our Chief Guest this evening.Dr.Murugesu is a General Practitioner in North London.She has served in the Mahajana College OSA Executive committee in the past and contributed to the welfare of Mahajana College in several ways.

I would also welcome our Guest of Honour,**Mr.S Manoharan** who has come from Paris.He has been a Drama enthusiast and has produced one of the Dramas presented this evening.

I would like to write a few lines about Mahajana College,Tellipalai.There are about 1700 pupils at present.The school,like many other schools in North and East of Sri Lanka, has gone through a tough time in the recent past and trying hard to get back to its previous glorious level.The infrastructure of the school has improved and it provides an environment and ambience to foster learning.At present they are focusing on academic and extracurricular achievements.We have been supporting the school in various ways with a view to providing a holistic education with a 'hope' for the next generation.Most of the proceeds from this event as well as previous similar events go to support Mahajana College.

I would like to take this opportunity to urge you all,to get actively involved with Mahajana College OSA and help our young Mahajanans.We strive to help our Alma Mata who had helped us to be what we are today.We all should work together and help the future generation to accomplish their potential to the maximum in whatever field they choose.'We make a living by what we get, but we make a life by what we give'-Winston Churchill.

I would like to thank the members of the executive committee who have helped to organise this event.I would extend my sincere gratitude to all the participants today,the Chief Guest,Guest of Honour and you,the Audience for your presence and support.

Have an enjoyable evening.

**Dr Theva Nathan**
President

## இன்றைய முதன்மை விருந்தினர்:

### வைத்திய கலாநிதி இந்திராணி முருகேசு

வைத்திய கலாநிதி, திருமதி இந்திராணி முருகேசு அவர்கள் மகாஜனாவின் பொற்கால மாணவர்களில் ஒருவர். மலேசியாவிலிருந்து இலங்கை திரும்பி இளவாலையில் வசித்த குடும்பத்தின் மூத்தவரான இந்திராணியும் அவரின் தம்பிமார்களான தெய்வேந்திரா, ஞானேந்திரா ஆகியோரும் அறுபதுகளில் மகா ஜனாவை அலங்கரித்தவர்கள். இந்திராணி கல்வியில் சிறந்து விழங்க தம்பிகளான தெயவேந்திராவும் ஞானேந்திராவும் விளையாட்டில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் சிறப்புப் பெற்றனர்.

எமது சங்கம் ஆரம்பித்த காலம் முதலாக சங்க நிகழ்ச்சிகளில் தனது கணவர் திரு முருகேசு அவர்களுடன் இணைந்து கலந்து கொண்டு வருகிறார். எமது ஆரம்பகால செயற்குழுக்களில் (நிர்வாகத்தில்) செயற்பட்ட இந்திராணி அன்றைய நிகழ்ச்சிகளின் உணவு ஒழுங்குகளைக் கவனித்து வந்தவர்.

இத்தகைய சிறப்புக்குரிய டாக்டர் இந்திராணி அவர்களையும் அவரின் கணவர் திரு முருகேசு அவர்களையும் இன்றைய நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக அழைத்துக் கௌரவிப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

## இன்றைய சிறப்பு விருந்தினர்:

### திரு சின்னத்துரை மனோகரன்

அளவெட்டியைச் சேர்ந்த மனோகரன் தற்போது வசிப்பது பிரான்ஸில். எழுபதுகளில் மகாஜனாவில் பயின்ற காலத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் ஆர்வம் காட்டியவர்.

துரையப்பா இல்லத்தின் தலைவராகவும் இருந்தவர். இன்று மகாஜனாவின் பாரம்பரியத்துக்கு ஏற்ப நாடக - இலக்கிய உலகிலே **ஓசை மனோ** என அறியப்படுகிறார்.பாரிஸிலிருந்து ஓசை. அம்மா ஆகிய சஞ்சிகைகளையும் வெளிக்கொணர்ந்தவர்.

பாரிஸ் பழையமாணவர் சங்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு மனோகரனை இன்றைய நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக அழைத்து அவரது நாடகமொன்றையும் மேடையேற்றுவது எமக்கு மகிழ்வைத் தருகிறது.

## கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி

**யா / மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**
**J / Mahajana College, Tellippalai**

மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சியினைக் கருத்திற் கொண்டு ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தால் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் மாபெரும் கலை விழாவான **'மகாஜன மாலை'** இவ்வருடம் பத்தாவது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மகாஜனக் கல்லூரி மாணவரின் கல்வி சார் நடவடிக்கைகளையும் கல்லூ ரி அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு நடாத்தப்படும் இந்நிகழ்வு, தமிழ்ப் பாரம்பரியக் கலைகளையும் எம்பண்பாட்டையும் வளர்க்க உதவுவதுடன் புலம்பெயர் மக்கள் தம் ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியுடன் களிக்கவும் உதவுகிறது.

கடந்த வருடம், 2014 ஒக்டோபர் மாதம் ராஜேஸ் வைத்தியாவுடன் இணைந்து நடாத்தப்பட்ட 'மாகாஜன மாலை' முடிவில் சிறிய நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. அந்த நூல் எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்ததோடு, நிகழ்வின் வரலாற்று ஆவணமாகவும் தன்னை முன்னிறுத்தியது. அது போலவே இந்த நிகழ்ச்சியும் சிறப்பாக அமையும் என்பது வெளிப்படை.

ஐக்கிய இராச்சியப் பழைய மாணவர் சங்கத்தால் நிகழ்த்தப்படும் இந்நிகழ்வு தொடர்ந்து வரும் காலங்களிலும் சிறப்பான முறையில் இனிது நடந்தேற மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவன் என்னும் வகையிலும் தற்போதைய அதிபர் என்னும் வகையிலும் எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**வெல்லுக மாகாஜன மாதா!**

நன்றி

**ம மணிசேகரன்**
அதிபர்

25 செப்ரெம்பர் 2015

# DON'T SIGN ANYTHING UNLESS YOU SEE THIS SIGN

INDEPENDENT FINANCIAL ADVISER

Only an Independent Financial Adviser work for you in recommending the best life assurance, mortages on the market. To be sure you get the best deal, contact Ram at

INTRINSIC

Rama & Company

Independent Protection & Mortgage Advisers

Rama

Principal: V R Ramanathan


Rama & Company is an appointed representative of Intrinsic Independent Limited, which is authorised and regulated by The Financial Conduct Authority

**3 The Orchard, Wickford, Essex, SS12 0HB. England**

Tel: (01268) 766624 Mobile: (07956) 369557 Fax: (01268) 561805

Email: vrramanathan@hotmail.com

# அ ந கந்தசாமி



08 - 08 - 1924 14 - 02 –1968

## *Message from the Secretary*



*Dear fellow Mahajanans, children and well-wishers,*

*It is with great pleasure welcome you all to our Annual Cultural Evening – 'Mahajana Maalai - 2015'. We are here today to celebrate 10th anniversary the Mahajana Maalai.*

*We are happy to inform you that we have established an **'International Mahajanans' Trust Fund'** and deposited SL Rs 57 lakhs in Chunnakam Branch, Commercial Bank in Sri Lanka. This fund will enable us to continue our support for the college long time. If you need further information please feel free to contact me.*

*The Mahajana College OSA-UK and it members have supported our school since we have established in year 1997. The chart below shows the OSA's support. This is from its annual report since year 2006.*

| MONEY REMITTED FROM MCOSA –UK TO MAHAJANA COLLEGE SINCE 2006 | | | |
|---|---|---|---|
| 2006-2008 | Sports, refurbishment and welfare assistance | £3,065 | |
| 2009-2010 | Sports, refurbishment and welfare assistance | £9,547 | |
| 2011-2012 | Sports, refurbishment and welfare assistance | £8,964 | |
| 2012-2013 | Sports, refurbishment and welfare assistance | £6,717 | |
| 2013-to date | Sports, refurbishment and welfare assistance | £9,996 | |
| | TOTAL AMOUNT REMITTED SINCE 2006 TO MAHAJANA COLLEGE | £38,289 | Rs. 8,278,000 |
| 22-Sep-15 | MAHAJANA INTERNATIONAL TRUST FUND (IMTF) | £26,369 | Rs. 5,701,082 |
| | TOTAL | £64,658 | Rs. 13,979,081 |

*We request your continuous support to MCOSA-UK. Please inform your children about MCOSA, they can associate with it and take part in the upcoming youth event, **"Mahajana Night – 2015"** on 27th Dec. 2015.*

*I invite every Mahajanans to take an active part in all the activities available and help the association to grow from strength to strength.*

*Finally, I would like to take this opportunity to thank all the Executive Committee members and volunteers for their hard work, commitment and teamwork which has been the key to our progress.*

*I hope you all will enjoy this cultural evening.*

*With best wishes*
***A.Wimalathasan,*** *Secretary*

# <u>சர்வதேச மகாஜனங்களின் நம்பிக்கை நிதியம்.</u>

## *INTERNATIONAL MAHAJANANS' TRUST FUND (IMTF).*

மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராசிய கிளையினர் (MOSA-UK), சங்கம் ஆரம்பித்த காலம் தொட்டே கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கு உதவி வருவது மகாஜனங்கள் அனைவரும் அறிந்ததே. இத்தொடர்ச்சியான உதவியை வரும் காலங்களில் உறுதி படுத்துவதற்காக உருவானதே சார்வதேச மகாஜனங்களின் நம்பிக்கை நிதியம்.

IMTF, இலங்கையில் அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அறகட்டளை உரிய சட்டதிட்டங்களின் படி அதன் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு பணியாற்றுகின்றனர்.

IMTF இல் ஒரு தொகையான பணத்தை நிலையான வைப்பு (FIXED DEPOSITS) கணக்கில் முதலிட்டு நிதி ஆண்டு முடிவில் பெறும் வட்டி பணம் ஒரு நடைமுறைக் (CURRENT ACCOUNT) கணக்கிற்கு மாற்றப்படும். கல்லூரியின் எதிர் காலத்தில் திட்டங்களை அமுல் படுத்த இந்நடைமுறை கணக்கிலுள்ள வட்டி பணம் தொடர்ச்சியான பல வருடங்களுக்கு உதவும் என்றால் மிகையாகாது. எக்காரணம் கொண்டும் நிரந்தர வைபில்லிட்ட பணம் திட்டங்களுக்கு பாவிக்க பட மாட்டாது.

ஆரம்பத்தில் கடந்த மாதம் (செப்டம்பர் 2015) இந்நிதியத்தில் ரூபா 57 லட்சங்கள் எமது சங்கத்தால், 8.9% வட்டி விகித்தில் வைப்பிலிடப்படுள்ளது. இதன் மூலம் வரும் வட்டி வருடாந்த நிதியாக கிடைக்கும். இவ்வட்டிப் பணத்தின் உதவியோடும், MOSA-UK நிர்வாகத்தின் அனுமதியோடும் கல்லூரி தேவைக்கேற்ப திட்டங்கள் செயலாக்கம் பெறும். மேலும் இத்தொகை ஒரு கோடி ரூபாவாக உயர்த்துவதற்கு நாம் முயற்சிகள் மேற்கொள்கிறோம்.

மகாஜனங்கள் 1000 மேலாக வாழும் ஐக்கிய இராச்சியத்தில் இத்தொகையை அடைவது ஒரு கடினமான செயலென நிர்வாகம் நினைக்கவில்லை. எனவே கல்லூரிக்கு உதவி செய்யும் ஒரு தூர நோக்குள்ள இம்முயற்சியில் உங்கள் எல்லோருடைய பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம். சகல மகாஜனன்களின் உதவியும் இன்முகத்தோடு வரவேற்கபடும். ஓர் உதவியும் சிறிய உதவி என கணிக்க பட மாடாது.

மகாஜனங்கள் ஆகிய நீங்கள் தனிப்பட்ட முறையில் ஒரு தொகை பணத்தை நாம் முதலிடும் தொகையோடு வைப்பிலிட்டால், அத்தொகையில் வரும் வட்டியை நீங்கள் விரும்பிய திட்டங்களை செயற்படுத்தலாம். உதரணமாக வறிய மாணவர்களுக்கு கல்வி-வாழ்வாதார உதவி வழங்கலாம், வருடாந்த பரிசில்கள் உங்கள் அன்பான உறவினர் ஞாபகமாக வழங்கலாம், இது போன்ற பல.

மேலதிக ஆலோசனைக்கு சங்க தலைவர் Dr தேவா நாதன் (07973 287038) செயலாளர் திரு அ விமலதாசன் (0780 1568925) பொருளாளர் திரு இரா சம்பந்தன் (07765 220892) உடன் தொடர்பு கொள்ளவும்.

வழமை போல் நிர்வாகத்தின் முயற்ச்சிகளுக்கு சகல மகாஜனங்களின் முற்று முழுதான ஒத்துழைப்பு கிட்டும் என்ற நம்பிக்கையுடன், IMTF இன் வெற்றி பெற மகாஜனங்களை எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**வெல்லுக மகாஜன மாதா!**

## *RE: INTERNATIONAL MAHAJANANS' TRUST FUND (IMTF)*

*The time has come to reveal the excellent news to you all.*

*Mahajana College Old Students Association –UK (MCOSA-UK) has now established an* ***International Mahajanans' Trust fund (IMTF)*** *in Tellippalai, Sri Lanka. IMTF is been registered as a charity in Sri Lanka and governed by the Sri Lankan charity commission rules and regulations.*

*A bank account in Commercial Bank at Chunnakam branch is opened and deposited SL Rs 57 lakhs. This deposit account will yield annual interest. The interest earned will be transferred to a current account and will be available to be spent only on the projects that are approved by the MCOSA-UK for that financial year. The money in the fixed deposit account will not be withdrawn under any circumstances. The money in the current account which is not spent at the end of the financial year will be added to the fixed deposit account in the next financial year.*

*On the other hand, if you want to donate funds to earmark your own long-term projects of your choice, i.e. a scholarship for a student or annual prize for an outstanding student in the name of your loved ones or otherwise. You may deposit your fund in the IMTF fixed account and interest earned from the deposit will fund your project annually.*

*Our target of IMTF is SL Rs.10 million. We are requesting all Mahajanans to donate as much as you can to achieve this target. Remember there is no amount that is too small to help your Alma meter.*

*MCOSA-UK has established long tradition of providing outstanding support to our College. This is your time to support our college or run your own project.*

*Please contact the President Dr Theva Nathan (07973 287038), Secretary A Wimalathasan(0780 1568925), treasurer R Sambanthan (07765 220892)should you wish to donate.*

*We look forward to hearing from you.*

**வெல்லுக மகாஜன மாதா!**

# வில்லூன்றி மயானம்

நாட்டினர்நீர் அறிவீர் வில்லூன்றி தன்னில்
நாம்கண்ட ஈமத்தீ வெறுந்தீ அன்று
கேட்டினிலே உளபிணத்தை உண்பதற்கு
கிளர்ந்தெழுந்த தீயன்று நெடுநா ளெங்கள்
நாட்டினிலே கிளைபரப்பும் சாதி என்னும்
நச்சுமர வீழ்ச்சியினைக் காண்பதற்காய்
வாட்டமுற்ற மக்களும் கனன்று பொங்கும்
வல்லதொரு புரட்சித்தீ வாழ்க வஃது.

மக்கள்குல மன்றநாம் மரமோ கீழாம்
மாடுகளோ விலங்குகளோ கூறும் என்று
திக்கற்றான் நெஞ்சினிலே பிறந்த வைரத்
தீ அதுவாம் திசை எங்கும் பரவுதற்கு
மக்கள் நாம் மறுப்பதெவர் என்று கூறி
மாவுரிமைப் போர்தொடங்கி விட்டன் அந்தத்
திக்கதனை வில்லூன்றித் திருத்த லத்தை
சிரந்தாழ்த்தி வணங்குவோம் புனித பூமி.

கேளீர்ஓர் வீரமிகு காதலி ஈது
கிளரின்பம் நல்குமொரு சேதி யன்றோ?
பாழினிலே பயந்திருந்த பாம ரர்கள்
பலகாலந் துயில்நீங்கி எழுந்துவிட்டார்
வாழியரோ வரப்போகும் நவயு கத்தின்
வளக்காலை இளம்பருதி வரவு ணர்த்தும்
கோழியது சிலம்பலிது வெற்றி ஓங்கக்
கொள்கைக்கிங் காதரவு நல்குவோம் நாம்.

பரம்பரையாய்ப் பேணிவந்த பழக்க மென்று
பழங்கதைகள் பேசுகின்றார் மனிதர் பார்ப்பின்
பரம்பரையாய்ப் பேணிடினும் தீயதான
பழக்கமெனப் பகுத்தறிவாற் கண்ட பின்னும்
சிரங்குவிப்பதோ அதற்கு? மூடச் செய்கைச்
சிறுமைஎன்று செகமெல்லாம் நகை நகைத்துச்
சிரிப்பதற்குச் செவிதாரீர் தீண்டாப் பேயின்
சிரங்கொய்தே புதைத்திடுவோம் வாரீர் வாரீர்.

***தினகரன் (09.11.1944)***

*வில்லூன்றி என்ற இடத்திலுள்ள மயானத்தில்*
*தாழ்த்தப்பட்டவர்களுடைய உடல்கள் தகனம்*
*செய்ய அனுமதி இருக்கவில்லை. அதனை எதிர்த்து*
*நடந்த போராட்டத்தில் 'சின்னத்தம்பி' என்பவர்*
*சாதி வெறியர்களால் கொல்லப்பட்டார்.*
*அப் போராட்டம் தொடர்பான கவிதை.*

## *அ ந கந்தசாமி*

*நாற்பத்தி மூன்று ஆண்டுகளே வாழ்ந்த **அ**(ளவெட்டி) **ந**(டராஜா) **கந்தசாமி** யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்தவர். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து அளவெட்டியிலிருந்த உறவினர்களோடு தங்கி மகா ஜனாவில் கல்விகற்றார். மகாஜனா ஈழத்து இலக்கியத்துக்கு ஈன்று புறந்தந்த –அ செ முருகானந்தன் மகாகவி ஆகியோருடன் அ ந கந்தசாமியும் மகா ஜனாவின் **மும் மணிகள்** எனப் போற்றப் படுகிறார்.*

*மகாஜன மாணவனாகவே இலக்கிய உலகில் காலடியெடுத்து வைத்த அ ந க 'கவீந்திரன்' எனும் புனைபெயரைச் சூட்டிக் கொண்டார்.(அதனை விடவும் சிறந்த புனைபெயரைச் சூடும் ஆர்வத்திலேயே உருத்திரமூர்த்தி மஹாகவியானார்) அ செ முருகானந்தன், அ ந கந்தசாமி, மஹாகவி, கவிஞர் கதிரேசர்பிள்ளை ஆகியோர் சம காலத்தில் மகாஜனாவில் கற்றதோடு இலக்கிய உலகிலும் நுழைந்தனர். ஈழத்தின் முதலாவது நவீன இலக்கிய இயக்கமான மறுமலர்ச்சியை உருவாக்கியதிலும் இந்த நால்வருக்கும் பங்குண்டு.*

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் சிலகாலம் கற்ற பின்னர் தகவற் திணைக்களத்தில் இணைந்து அவர்கள் வெளியிட்ட* Sri Lankan *சஞ்சிகையின் ஆசிரியரானார். பின்னர் இலங்கைக் கம்யுனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியராகி அதன் தொழிற் சங்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். இக்கால கட்டத்திலே கட்சிப் பத்திரிகையான தேசாபிமானியின் ஆசிரியாகவும் கடமையாற்றினார்.*

*இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஏனையவர்களுடன் சேர்ந்து உருவாக்கி அதன் பண்ணையும் தானே இயற்றினார். எமிலி ஜோலாவின் நநா உட்பட பல நவீனங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழ்ப் படுத்தியுள்ள அ ந க வின் படைப்புக்களில் ஒன்றே நூலுருப் பெற்றிருக்கிறது.*

*அ ந க வின் நினைவைப் போற்றும் முகமாக இன்றைய அரங்குக்கு **அ ந கந்தசாமி அரங்கு** என பெயர் சூட்டியுள்ளதோடு அவரது கவிதையொன்றையும் இங்கு பிரசுரிக்கிறோம்.*

*பணியாற்றிய பத்திரிகைகள்:* Sri Lankan, Tribune, *தேசாபிமானி சுதந்திரன்*

## 10 வது மகாஜன மாலை

**காலம்:** 10. 10. 2015 சனிக்கிழமை இரவு 6.15
**தலைமை:** திருமதி, டாக்டர் தேவா நாதன் - சங்கத் தலைவர்
**பிரதம விருந்தினர்:** திருமதி, டாக்டர் இந்திராணி முருகேசு
**சிறப்பு சிருந்தினர்:** திரு சி மனோகரன் - பிரான்ஸ் மகாஜனா
**அரங்கு: அ ந கந்தசாமி அரங்கு**

18.15: **மங்கல தீபம் ஏற்றல்**

18.18: **மௌனாஞ்சலி**

18.20: **உருவப்படங்களுக்கு** மாலைஅணிவித்லும் **கல்லூரிக் கீதம்** இசைத்தலும்

18.25: **புல்லாங்குழலிசை**: செல்வன் அர்ஜுனா விமலதாசன் குழுவினர்

18.40: **நடனம்:** செல்வி கிருத்திகா சம்பந்தன்

18.50: **சர்வதேச மகாஜனன்களின் நிதியம்** பற்றிய உரை: திரு அ விமலதாசன்

18.55: **நாடகம்: மாவீரன் பண்டாரவன்னியன்**

மேடைமீது:

| | |
|---|---|
| பண்டாரவன்னியன்: | சு சிறிகாந்தலிங்கம் |
| காக்கை வன்னியன்: | பொ ரவிச்சந்திரன் |
| கேர்னல் ஜோவெல்: | து சிறிமோகன் |
| கப்டன் வொன் ட்றிபேர்க்: | சிறிலஷ்மன் சிறிகாந்தலிங்கம் |
| லெப்டினன் கென்றி: | கர்சாநாத் சிவராஜா.. |
| சிப்பாய் 1: | சாருஜன் சோதிலிங்கம் |
| சிப்பாய் 2: | நாகுஸ் கரிகரன் |

*மூலப் பிரதி:* *முல்லைமணி*
*நெறியாழ்கை:* *சு சிறிகாந்தலிங்கம்*

19.20: **நடனம்:** செல்வி கிருத்திகா சம்பந்தன்

19.30: **நாடகம்: அஞ்சலி**

மேடைமீது:
ச வாசுதேவன்
வ சண்முகராஜா
வ சிவானந்தராஜா
பத்மராணி சிவநேசன்
அ விமலதாசன்
வ சிவரதன்
சி கணேசலிங்கம்

*பிரதி நெறியாழ்கை:* *மனோ*
*தயாரிப்பு:* *மகாஜனப் பழைய மாணவர் சங்கம்*

19.50: **நடனம்:** செல்வி யசோதரன்

20.00: **நாடகம்: அவசரக்காரர்கள்**

மேடைமீது:
க பாலேந்திரா
ஆனந்தராணி பாலேந்திரா
சி கணேசலிங்கம்
ராம்கீரன் சிவசுப்ரமணியம்

*பிரதியாக்கம்:* *மாவை நித்தியானந்தன்*
*நெறியாழ்கை:* *க பாலேந்திரா*
*தயாரிப்பு: :* *தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்*

20.15: **தலைவர் உரை:** வைத்திய கலாநிதி தேவா நாதன்

**பிரதம விருந்தினர்:** வைத்திய கலாநிதி இந்திராணி முருகேசு

**சிறப்பு விருந்தினர்:** சி மனோகரன்

20.30: **இடைவேளை**

20.50: **பல்லியம்**

**இசை:** **பல்லவி இசைக் குழு**

*"சிறு நண்டு மணல்மீது..."*

**இயற்றியவர்:** *மஹாகவி*

**பாடகர்:** *க பராபரன்*

*"மூங்கில்கள் நெரியும் கரையில்...."*

**இயற்றியவர்:** *உ சேரன்*

**பாடகர்:** *கவித்தா வேந்தன்*

*"அதிகாலையின் பனி யாழ்நகர் மீது...."*

**இயற்றியவர்:** *உ சேரன்*

**பாடகர்:** *க பராபரன்*

*"இப்பொழுதே தூங்கிவிடு...."*

**இயற்றியவர்:** *மஹாகவி*

**பாடகர்:** *மா சத்தியமூர்த்தி*

*"எவடம் எவடம் புளியடி புளியடி..."*

**இயற்றியவர்:** *உ சேரன்*

**பாடகர்கள்:** *வேந்தன் ஆறுமுகசாமி,*
*கவித்தா வேந்தன்*

21.50: **நன்றியுரை:** **நா சபேசன்**

21.55: **திரையிசைக் கோலம்:**

THE ULTIMATE ENTERTAINERS pallavi **பல்லவி இசைக் குழு**

22.30: **நிகழ்ச்சி நிறைவு**

# நன்றி

| | |
|---|---|
| முண்டபம் தந்த: | **Tolworth Girls School** |
| முதன்மை விருந்தினர்: | **வைத்திய கலாநிதி இந்திராணி முருகேசு** |
| சிறப்பு விருந்தினர்: | **திரு சி மனோகரன்** |
| இளம் நடனக் கலைஞர்கள் | **செல்வி கிருத்திகா சம்பந்தன். செல்வி யசோதரன்** |
| புல்லாங்குழல் இசைத்த | **செல்வன் அர்ஜுன்** |
| பண்டாரவன்னியன் | **நாடகக் குழு** |
| அஞ்சலி | **நாடகக் குழு** |
| நாடகம் தந்த | **தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்** |
| இசை வழங்கிய | **பல்லவி இசைக் குழு** |
| பாடகர்கள் | **மா சத்தியமூர்த்தி க பராபரன்** |
| ஒலியமைத்த | **பிரபா சத்தியேந்திரா** |
| மலர் தயாரித்த | **Set Line Data Ltd** |
| என்றும் ஆதரவு நல்கும் | **விளம்பரதாரர்** |

**தொடர்ந்தும் எங்களை ஆதரித்து ஊக்கமளிக்கும் இரசிகர்கள்**

அனைவருக்கும்
**மகாஜன சமுகத்தின்**
மனம் நிறைந்த

# நன்றி !

**Mahajana College Old Students Association UK**
95 Knightwood Crescent
New Malden, Surrey KT3 5JP
http//www.mahajana.co.uk
*E-mail: mahajanaOSAUK@gmail.com*

# கல்லூரிக் கீதம்

(ஜன கண மன.....என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம்பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா.


புலவர் நா சிவபாதசுந்தரம்

Estd 1992

SKC

# SRIKANTH&CO SOLICITORS

We practise in the following areas of law



- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licencing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfate Matters

**Tel : 020-8795 0648**
**Mob : 07831 195 979**
**Fax : 020 8795 0649**

E-mail : info@srikanthsolicitors.co.uk
www : srikanthsolicitors.co.uk

**557 High Street, Wembley, Middlesex HA0 2DW**

# Lycamobile

**Call the world for less**

# இலங்கை

## 5p
நிமிடத்திற்கு

வீட்டுத்தொலைபேசி

## 8p
நிமிடத்திற்கு

கைத்தொலைபேசி

## 3p
நிமிடத்திற்கு

டயலொக் தொலைபேசி
இணைப்புக்களுக்கு

அனைத்து UK PLAN
கொள்வனவின் போதும்
இச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம்

இச்சலுகையை பெற்றுக்கொள்ள
**SAVE** எனும் குறுந்தகவலை **2525** எனும் இலக்கத்திற்கு அனுப்புங்கள்

## UK PLAN

**£12**
மட்டுமே
/30 நாட்கள்

**1000**
**UK நிமிடங்கள்**

**2GB**
**இணைய பாவனை**

**வரையறையற்ற**
**குறுந்தகவல்கள்**

இங்கிலாந்து லைக்காமொபைல்
பாவனையாளர்களுக்கு வரையறையற்ற
நிமிடங்கள் மற்றும் குறுந்தகவல்கள்






இச்சலுகையை பெற்றுக்கொள்ள **12044** எனும்
குறுந்தகவலை **3535** எனும் இலக்கத்திற்கு அனுப்புங்கள்.

Top-up your SIM
online or where you see
the following signs:

TESCO
ASDA
Martin McColl
Sainsbury's
WHSmith

Customers may not be able to use
Electronic Top-Up at all locations
where the top-up logo appears

Lyca mobile
Call the world for less

**இலவச SIM அட்டையை பெற்றுக்கொள்ள www.lycamobile.co.uk**
**என்ற இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள் அல்லது**
**020 7132 0322 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்**

நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டது